
# திராவிடத்தால் வாழ்கிறோம்

934

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

77


**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## பேசி வளர்ந்த இயக்கம்!

*1931-ஆம் ஆண்டு டிசம்பர் 13-ஆம் தேதி, சென்னையில் இருந்து பாண்டிச்சேரி வழியாக ரஷ்யா புறப்பட்டார் தந்தை பெரியார். அந்த ஆண்டு நவம்பரிலேயே சென்னை சுயமரியாதை மாநாடு கூட்டப் படுவதாக இருந்தது. ஆனால், டிசம்பர் 26, 27 ஆகிய தேதிகளில் பெரியார் இல்லாமலேயே சென்னை சுயமரியாதை மாநாடு, பச்சையப்பன் கல்லூரி ஹாலில் பிரமாண்டமாக நடைபெற்றது.*

*ஆயிரக்கணக்கான சுவரொட்டிகள் சென்னை நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் தாங்கிய பல்லாயிரக்கணக்கான சுவரொட்டிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, டிராம்களிலும் பேருந்துகளிலும் விநியோகிக்கப்பட்டன. 'Self Respect Conference', 'மதம் வாழ்க்கைக்கு அபின்' என்றெல்லாம் ஆங்கிலத்தில் துணியில் எழுதப்பட்டு, பொதுவெளியில் கட்டப்பட்டிருந்தன. மண்டபத்திற்குள் பதாகைகள் ஏராளம் தொங்கவிடப்பட்டிருந்தன.*

*முதல் நாள் மாநாட்டைத் தொடங்கிவைத்த பொதுவுடைமை இயக்கத் தோழர் சிங்காரவேலர், "அறியாமை நிறைந்த காலத்தில் உருவான மதத்தைக்கொண்டு சிலர் பெரும்பான்மையானோரை மூடத்தனத்தில் வைத்து, அவர்களை ஆண்டு வருகின்றனர். தோட்டி வேலை, வண்டி இழுக்கும் வேலை, மீன் பிடிக்கும் வேலை, துப்புரவு வேலை, சம்மட்டி வேலை, உழவு வேலை என எந்த கஷ்ட வேலையும் பிராமணனுக்கு இல்லை ஏன்? அவனே ஜாதியை முதலில் வகுத்ததால், மேலான*




*வேலைகளை அவன் வைத்துக்கொண்டு, மற்றவர்களுக்கு திரேக (உடல் உழைப்பு) அனுபவங்களால் செய்யும் வேலைகளை ஏற்பாடு செய்தான். நீங்கள்தான் (சுயமரியாதை இயக்கம்) இந்த ஆயிரந்தலையுடைய விஷப்பாம்பை (சாதி) நசுக்க வேண்டும். உங்களால் ஆகாவிட்டால் உலகிற்கு இனி எந்த நம்பிக்கையுங் கிடையா. பாமர மக்களுக்கு சுடரொளியாக உங்கள் இயக்கம் வந்துள்ளதாக எண்ணுகிறேன்" என்று நீண்ட உரையாற்றினார்.*

*மாநாட்டுத் தலைவர் ஜோலார்பேட்டை பார்த்தசாரதி பேசும்போது, "டிராம் வண்டிகளைக் கண்டுபிடித்தவர்கள்கூட குங்குமம் பூசுவதில்லை, ஆனால், நம் மக்கள்தான் பூசிக் கொண்டிருக்கிறார்கள்" என மூடப்பழக்க வழக்கங்களைத் தோலுரித்தார். செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்கப்பட்டன. சென்னை நகர சபையின் இந்தித் திணிப்பு முயற்சிக்குக் கண்டனம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை ஒட்டி, பலர் வழங்கிய கருத்துரைகளுடன் முதல் நாள் மாநாடு முடிவுற்றது.*

*இரண்டாம் நாள் காலையில், பெண்கள் மாநாடு நடைபெற்றது. மேடை முழுவதும் பெண்களே இருந்தனர். மாநாட்டு அரங்கம் நிரம்பி, வெளியே வரை கூட்டம் இருந்தது. குஞ்சிதம் அம்மையார் வரவேற்புரை ஆற்ற, அன்னபூரணி அவர்கள் தலைமைச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பெண்கள் மாநாட்டிலும் தனியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக மாலை 3 மணிக்கு தொண்டர்கள் மாநாடு தொடங்கியது. சகுந்தலா அவர்கள் ஆங்கிலத்தில் வரவேற்புரை ஆற்றினார். இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் தலைமையுரை நிகழ்த்தினார்.*

*அதன்பிறகு விஸ்வநாதம் அவர்கள் 'கிழக்கும் மேற்கும்', முருகப்பர் அவர்கள் 'சடங்குகள்', பொன்னம்பலனார் அவர்கள் 'சடங்குகள்', பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள் 'சுயமரியாதையும் காங்கிரஸூம்' ஆகிய தலைப்புகளில் உரை நிகழ்த்தினர். கடைசிவரை கூட்டம் கலையாமல், கருத்துகளை உள்வாங்கியது. 2 நாட்களிலும் சி.ஆர்.நாராயணசாமி, சுயமரியாதை கீதங்கள் பாடினார். என்.பி.காளியப்பன், முருகேசம் உட்பட பலர் அவ்வப்போது பாடல்கள் பாடினர். பெரியார் இல்லாத மாநாடுதான், ஆனாலும், சுயமரியாதைக்காரர்களை மிஞ்சிய மேடைப் பேச்சாளர்கள் யாரும் இல்லை என்ற குரல்கள் கூட்டத்தில் முணுமுணுக்கத் தவறவில்லை.*

**...கூட்டம் திரளும்**

## நாட்டில் வீடற்ற ஏழைகள்! -தேர்தல் ஆணையத்தின் வாக்குமூலம்!

2024 நாடாளுமன்றத் தேர்தலில், தேர்தல் ஆணையத்தின் துணையுடன் பா.ஜ.க. வாக்குத் திருட்டில் ஈடுபட்டது என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி ஆதாரத்துடன் குற்றம்சாட்டி வருகிறார். தேர்தல் ஆணையத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ள நிலையில், அதற்கு தேர்தல் ஆணையம் அளித்து வரும் விளக்கம், ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகளை உறுதி செய்வதாக சமூக வலைதளங்களில் கருத்துகள் பகிரப்படுகின்றன.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் 17.08.2025 அன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது, முகவரியில்லாமல் சேர்க்கப்பட்டிருக்கும் வாக்காளர்கள் குறித்த கேள்விக்கு அளித்த விளக்கம், 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியின் அவலத்தைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

'இந்த நாட்டில் பல மக்களுக்கு வீடுகள் இல்லை, அவர்கள் அங்கீகரிக்கப்படாத இடங்களில் வாழ்கின்றனர். சாலையோரங்களில், தெருவிளக்குகளின் அடியில், பாலங்களுக்கு அடியில் வசிக்கிறார்கள்; அவர்களுக்கு பூஜ்ஜியம் எண் கொடுத்து, வாக்காளர் பட்டியலில் சேர்த்துள்ளோம்" என ஞானேஷ்குமார் குறிப்பிட்டார்.

நாட்டில், வீடுகள் அற்ற, முகவரி அற்ற ஏழைகளை தேர்தல் ஆணையமே கண்டறியும் நிலையில், 10 ஆண்டுகால ஆட்சியில் பா.ஜ.க. செய்தது என்ன என அரசியல் விமர்சகர்கள் எள்ளி நகைக்கின்றனர்.

தவிர, தேர்தல் ஆணையம் குறித்த தனது குற்றச்சாட்டுக்கு பொறுப்பேற்று, ராகுல் காந்தி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையர் வலியுறுத்தினார். தரவுகள் தேர்தல் ஆணையத்திடம் இருந்து எடுக்கப்பட்டவை என ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட பின்பும், தேர்தல் ஆணையம் உண்மைக்குப் புறம்பாக நடந்து கொள்கிறது. பீகாரில் 20 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் குளறுபடிகளைச் செய்துள்ளது என ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ் குற்றம்சாட்டி இருக்கிறார். நாட்டின் தேர்தல் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தவறி, பா.ஜ.க.வின் பாதுகாவலனாக தேர்தல் ஆணையம் மாறிவிடக்கூடாது என்பதே ஜனநாயக சக்திகளின் எதிர்பார்ப்பு.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

77

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## 'ஆஸாதி' -விடுதலை முழக்கத்தின் குரல்!

*இந்திய இறையாண்மைக்குக் குந்தகம் விளைவித்து, பிரிவினையைத் தூண்டுவதாக காஷ்மீரில் 25 நூல்கள் சமீபத்தில் தடை செய்யப்பட்டன. அந்தப் பட்டியலில் முதலில் இருந்த நூல் எழுத்தாளர் அருந்ததி ராய் எழுதிய 'ஆஸாதி'. 2015-2020 வரையில் பாசிச பா.ஜ.க. அரசு நிகழ்த்திய வன்முறைகள், அடக்குமுறைகள் ஆகியவற்றுக்கு எதிர் வினையாற்றும் வகையில், அருந்ததி ராய் எழுதிய 9 கட்டுரைகள் இந்த நூலில் உள்ளன.*

*'பாசிச பா.ஜ.க. அரசுக்கு எதிராக நாடெங்கும் நடைபெற்று வரும் பல போராட்டங்களில் இன்று 'ஆஸாதி' என்கிற சொல் ஒலிப்பதை கவனிக்கலாம். இதன் அர்த்தம் 'சுதந்திரம்' அல்லது 'விடுதலை'. இந்திய ஒன்றியத்திடமிருந்து விடுதலையா என்று கேட்டால் இல்லை, இந்திய ஒன்றியத்திற்குள் மனிதர்கள் நிம்மதியாக இருக்க சுதந்திரம் மற்றும் விடுதலை என்றளவில்தான் இந்த சொல் பல போராட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது' என்று இந்த நூலின் கட்டுரைகள் வழி தனது கருத்தினை முன்வைக்கிறார் அருந்ததி ராய்.*




*1930-களில் நாஜி ஜெர்மனியிலும், 1981-ல் இலங்கை யாழ்ப்பாணத்திலும், நூலும் நூலகமும் கொளுத்தப்பட்டு அறிவியக்கத்தின் மீது நிகழ்த்தப்பட்ட அச்சுறுத்தல்போல, காஷ்மீர் மக்களின் 'சிவில்' உரிமைகளைப் பேசும் நூல்களை முடக்கியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இந்த நூலில், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து, அரசியல் செயல்பாட்டாளர்கள் மற்றும் அறிவுஜீவிகள் கைது, சி.ஏ.ஏ. - என். ஆர்.சி - என்.பி.ஆர். (CAA-NRC-NPR), தனியார் மயமாக்கல், டெல்லி கலவரம், பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல், வடகிழக்கு மாகாணங்களின் போராட்டம் மற்றும் இந்நூல் ஆசிரியரின் புனைவு நூல்கள் பேசும் அரசியல் ஆகியவை குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கட்டுரைகளை வாசிக்கும்போது இந்த மக்கள் விரோத அரசின் மீது இருக்கும் கோபமும் அதிருப்தியும் அதிகமாகிக் கொண்டுதான் போகிறதே ஒழிய குறையவில்லை. ஆனால், ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் சிறு நம்பிக்கையுடன்தான் முடிக்கிறார் ராய்.*

*சமகால இந்தியாவில் சிறுபான்மையினராக இருப்பது எவ்வளவு கொடுமையானது என்று தினம்தினம் நடக்கும் நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இப்போதிருக்கும் ஒன்றிய அரசு இஸ்லாமியர்கள், தலித்துகள், பெண்கள், திருநர்கள் என அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எதிரான அரசு. ஜனநாயகத்தின் குரல்கள் மதத்தின் பெயராலும் சாதியின் பெயராலும் பாலினத்தின் பெயராலும் ஒடுக்கப்படுவது இந்தியா உருவாக்கப்பட்ட சிந்தனைக்கு முற்றிலும் எதிரானது என்கிறார் அருந்ததி ராய்.*

*முக்கியமாக, 'இந்து-இந்தி- இந்துத்துவா-இந்துஸ்தான்' என்ற கருத்தியலின் அடிப்படையான தத்துவத்தையும் அதன் வளர்ச்சியையும் பதிவு செய்கிறார். மோடி என்ற பிம்பம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டது, குஜராத் கலவரம் அந்தக் கட்டமைப்பில் எவ்வித பங்கு வகித்தது, இப்போது அவரின் இடத்தை நிரப்ப யோகி ஆதித்தியநாத் செய்யும் பித்தலாட்டங்களையும் இந்நூலில் அம்பலப்படுத்துகிறார்.*

*ஆங்கிலத்தில் வெளியான இந்த நூலை தமிழில் ஜி.குப்புசாமி மொழிபெயர்க்க, காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*


*அதிகாரத்தால் தடை செய்யப்பட்ட நூல்களை எல்லாம், மக்கள் மத்தியில் எழுச்சியுடன் கொண்டு சென்ற மரபு, திராவிட இயக்கத்துக்கு உள்ளது. அந்த வகையில், 25 நூல்கள் தடைசெய்யப்பட்டிருக்கும் இத்தருணத்தில், இந்திய ஜனநாயகத்தைச் சிதைக்கும் மதவாத ஆட்சியாளர்களை எதிர்த்து ஒன்றுபட்ட குரலாக 'ஆஸாதி' என்ற விடுதலை முழக்கத்தை எழுப்புவதே தார்மீக அறமாக இருக்கும்.*

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்



## பத்திரிகையாளராக ஒரு புகைப்படம்!



வி.டி.ராஜன்

2009-ஆம் ஆண்டு, எழும்பூர், ராஜா முத்தையா திருமண மண்டபத்தில் ஒரு திருமண நிகழ்வுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் வருகை தந்திருந்தார். கலைஞர் மணமக்களை வாழ்த்தியதும், அவருடன் மணவீட்டார் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில், நான் இன்றைய கழகத் தலைவருடன் ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டேன். பத்திரிகையாளராக என்னை நன்கு அறிந்த தலைவர், நலம் விசாரித்தார். கலைஞர் வரும்வரை அவரோடு நின்றிருந்தேன்.

**- வி.டி.ராஜன்,**
**மூத்த பத்திரிகையாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# கருவூலம்

## சென்னை மாவட்ட தி.மு.க. மாநாடு!

1962-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 முதல் 15-ஆம் தேதி வரை மூன்று நாட்கள் சென்னை மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடு கோடம்பாக்கத்தில் நடைபெற்றது. என்.எஸ்.கே.கோலப்பனின் 'நேற்று-இன்று-நாளை' வில்லுப்பாட்டும், நடிப்பிசைப் புலவரின் 'அழகின் சிரிப்பு'. 'தமிழ் வாழத் தலை கொடுத்தான்' நாடகங்களும், முரசொலி நாடக மன்றத்தாரின் 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' நாடகமும் நடைபெற்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131